Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 13 (28 . 12 . 1991) சனிக்கிழமை ஓசை: 313

## வடக்கு தொண். ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் இல்லை

வடபகுதியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படமாட்டாது என கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதேவேளை வடபகுதி தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் அடுத்த ஆண்டு முற்பகுதியில் நிரந்தர நியமனமாக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வடபகுதியில் தொண்டர் ஆசிரியர்களை நியமனமாக்குவதற்குமுன்னோடியாக இப்பகுதிகளில் கள நிலைநேர் (3ம்பக்கம்பார்க்க)

### [சிறிலங்கா அரசின்]

# இராணுவ அரசியல் தந்திரோபாயம்: சவாலை எதிர்கொள்ள புலிகள் தயார்

## தொண்டாவின் திட்டம் பற்றியும் பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் இன்றைய இராணுவ - அரசியல் அணுகுமுறைபற்றியும் அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்டத்தில் அடங்கிய யோசனைகள் பற்றியும் விடுதலைப் புலிகள் நேற்று விரிவான பரிசீலனை நடத்தினர்.

திரு. தொண்டமானின் திட்டத்திலுள்ள உள்ளடக்கபூர்வமான அம்சங்கள் பற்றியும், அதில் உள்ள குறைபாடுகள் பற்றியும் நேற்றுக்காலை நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் விவாதிக்கப்பட்டது. அமைச்சர் தொண்டமான் தைப்பொங்கலோடு யாழ்ப்பாணம் வரும் பொழுது தெளிவற்றதாக விடப்பட்டிருக்கும் பல்வேறு விடயங்கள் குறித்து விளக்கம் கோருவதெனவும் இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு புறத்தில் அமைச்சர் தொண்டமானை ஒரு சமரச முயற்சியில் மறைமுகமாக ஊக்குவிக்கும் சிறிலங்கா அரசு மறுபுறத்தில் பெரும் தாக்குதலுக்கான இராணுவ தயாரிப்புகளிலும் ஈடுபட்டுவருகிறது இந்நிலையில் அரசியல் இராணுவ ரீதியில் அரசாங்கத்தின் தந்திரோபாயங்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றியும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது

இதேவேளையில் யாழ்ப் (3ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாவின் திட்டத்திற்கு ராகுல தேரோ கண்டனம்

இனப்பிரச்சினை குறித்து இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்த யோசனைகளுக்கு வண. வல்பொல ராகுல தேரோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொண்டமான் தெரிவித்தயோசனைகள் ஈழக் கோரிக்கையின் சகலவற்றையும் கொடுப்பதாகவுள்ளது என்றும்...

## தந்திரமான முறையில் மக்கள் பிடிக்கப்பட்டனர்

(வவுனியா)

வவுனியாவில் மூன்று இரா... சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாதவாறு தடுத்து வைத்...

## சமயம் ஒரு பிரிவினை சக்தியாகவும் மாறலாம்

### —கொழும்பு அதி. மேற்றாணியார்

(கொழும்பு)

பல வருடங்களாக கவனிப்பாரற்றுக் கனிந்திருந்த இனப்பிரச்சினை 1983 - இல் எரிமலை போல் வெடித்தது. நியாயபூர்வமான விட்டுக்கொடுப்புகள் மூலம் நேரகாலத்தில் சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய இப்பிரச்சினை ஏறக்குறைய தீர்க்கமுடியாத ஒரு பிரச்சினையாகக் காலப்போக்கில் வளர்ந்துள்ளது. இன்றும் இது நாட்டின் ஒரு முக்கிய பிரச்சினையாகும். கூடி ஆலோசனை செய்தல், உடன்பாடு, இணங்குதல் ஆகியன இன்னமும் நியாயமான தீர்வுக்கான வழிகளாகும்.

இவ்வாறு கொழும்பு அதி. மேற்றாணியார் அதி. வண. நிக்கலஸ் மார்க்கஸ் பர்ணான்டோ (3ஆம் பக்கம் பார்க்க)

## சுத்திகரிப்பு நடவடிக்கையும் சுகாதார போதனைகளும்

சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான வேலைகளும் சுகாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் சுகாதாரப் போதனைகளும் (4 ஆம் பக்கம் பார்க்க)

[illegible]

## ராகுல தேரோ கண்டனம்

இனப்பிரச்சினை குறித்து இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்த யோசனைகளுக்கு வண. வல்பொல ராகுல தேரோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இவர் வெளியிட்ட இருபந்திகளைக் கொண்ட அறிக்கையிலேயே இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமான் தெரிவித்த யோசனைகள் ஈழக் கோரிக்கையின் சகலவற்றையும் கொடுப்பதாகவுள்ளது என்றும்.

இந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முயற்சியில் மறைமுகமாக ஊக்குவிக்கும் சிறிலங்கா அரசு மறுபுறத்தில் பெரும் தாக்கு [illegible]

ஆராயப்பட்டது இவ்வேளையில் யாழ்ப் (3 ஆம் பக்கம் பார்க்க)

## தந்திரமான முறையில் மக்கள் பிடிக்கப்பட்டனர்

(வவுனியா)

வவுனியாவில் மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்களை தந்திரமாக அழைத்த இராணுவத்தினர், அவர்களைச் சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாதவாறு தடுத்து வைத்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா - மன்னார் வீதியில் சில மைல் தூரம் முன்னேறி வந்த படையினர், அருகில் உள்ள கிராம மக்களை இடம் பெயர்ந்து செல்ல வேண்டாம் என்றும் தம்மிடம் வந்து பெற (3 ஆம் பக்கம் பார்க்க)

ஒரு பிரச்சினையாகக் கருதப் (3 ஆம் பக்கம் பார்க்க)

## சுத்திகரிப்பு நடவடிக்கையும் சுகாதார போதனைகளும்

கற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான வேலைகளும் சுகாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் சுகாதாரப் போதனைகளும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சினால் மக்கள் இடம் பெயர்வு

வவுனியா மன்னார் பகுதிகளிலுள்ள எல்லைப்புறக் கிராமங்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி வருவதால் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து மடு அகதி முகாமிற்குச் சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

## காங்கேசன் துறைமுகம் திறக்கும் முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருள்களை தருவிப்பதற்காக காங்கேசன்துறை துறைமுகத்தை திறப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மீண்டும் தோல்வியடைந்துள்ளன. காங்கேசன்துறை துறைமுகத்தில் உள்ள களஞ்சியம் சேதமடைந்திருப்பதனால் இங்கு அதிகளவு பொருள்களை களஞ்சியப்படுத்த முடியவில்லை என்றும் இத்துறைமுகத்தில் கடமையாற்றிய துறைமுகத் தொழிலாளர்கள் கொழும்பு சென்று விட்டனால் இங்குவரும் கப்பலில் (3 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் குண்டு வீச்சு; ஆலயம், வீடுகள் சேதம்

பூநகரியை அண்டிய பகுதிகளில் நேற்று சியாமாச்செட்டி விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. அத்தாய், கொக்கைகுறிச்சி, ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை பதினொரு மணியளவில் இரண்டு சியாமாச்செட்டி விமானங்கள் தலா இரண்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம் வில்லியம்

6-11-91 அன்று வைத்திய சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வில்லியம (வெளி [4 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் -- இராணுவம் மட்டக்களப்பில் மோதல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காங்கேயனோடைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டைகள் நேற்று நடைபெற்றதாக கொழும்பில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## முழுமையான நிவாரணபொருள்கள் செயலகம் வழங்குவதில்லை

### கூட்டுறவுச் சங்கங்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். ப. நோ. கூ. சமாசத்தின் ஊடாக விநியோகிக்கப்படவேண்டிய நிவாரணங்களுக்குஉலர் உணவுப்பொருள்கள் செயலக செயல் திட்டப்பணிப்பாளரால் முழுமையாக வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் சிறிலங்கா, புதுவருடப் பண்டிகைகளை முன்னிட்டு கூட்டுறவுச்சங்கக் கடைகளால் பூரண சேவையாற்ற முடியாதிருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அன்றாடப் பாவனைக்குரிய நிவாரணப்பொருள்கள் கிடைக்காத காரணத்தால் தினமும் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று ப. நோ. கூ. சமாச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலைஉணவுமுத்திரை மாதாந்த உதவிப் பணம்பெறுவோர் கொடுப்பனவு, வறுமைக்கான உலர் உணவு விநியோகம், 5 ஆம் தொடர் 12 வது இலக்க உணவு முத்திரை (8 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் உணவு முத்திரை பொருள்கள் பெறுவதற்கு பெற்றோர் அலைகின்றனர்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை உணவுமுத்திரைக்கான நுகர்வுப் பொருள்களைப் பெறுவதற்காக பெற்றோர் தினமும் கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்குச் சென்று வெறுமையுடன் திரும்புவதை அவதானிக்க முடிகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முழுமையான விநியோகத்துக்குரிய நுகர்ச்சிப் பொருள்களை வழங்காததும் சில பாடசாலை அதிபர்களின் (3 ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் மூன்றாகச் சிதறியது; 129 பயணிகள் தப்பிய அதிசயம்

மூன்று துண்டாக வீழ்ந்து நொருங்கிய விமானத்தில் இருந்த பயணிகள் சகலரும் ஆச்சரியப்படத் தக்கவிதத்தில் உயிர்தப்பினர்.

சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோம் நகரில் இருந்து புறப்பட்ட விமானமொன்று நேற்று விபத்துக்குள்ளாகியது புறப்பட்ட மூன்றாவது நிமிடத்தில் சுமார் ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருந்தபோது விமானத்தின் இரண்டு என்ஜின்களும் இயங்கத் தவறியதால் இவ் விபத்து நேர்ந்தது.

அடர்ந்த காட்டுப்பகுதியொன்றில் விமானம் மூன்று துண்டுகளாக நொருங்கிக் கிடக்க பின்னர் கண்டுபிடிக் [4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**பயிற்சி வகுப்புக்கள்**

மனையியல் டிப்ளோமா வகுப்புகள் கேக் ஐசிங் சிற்றுண்டிவகை, சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம், தையல், பூக்கள் செய்தல், வண்ணச் சாயமிடல் மற்றும் கைவேலைகள். பயிற்சிக்காலம் 3, 6, 9 மாதங்கள் திருமதி பவளம் சிவசுப்பிரமணியம் "கனிந்தா பாடசாலை" பூநாறி மரத்தடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (B/3698)

**தவறிவிட்டது**

திருமதி வே. சிவபாக்கியம் (இருபாலை கிழக்கு) என்பவரின் புடவைகள் அடங்கிய பார்சல் ஒன்று [illegible] (26-12-91) இல் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (R/2047)

## வெள்ளிவிழாக் கூட்டம்

சாந்தி அகம் - உளவளத்துணை நிலையப் பொறுப்பாளர் அருட்தந்தை சா. மரியதாஸ் செல்வரெட்ணம் (அ. ம. தி) அவர்களின் வெள்ளிவிழா வரவேற்புக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை அவரது பிறப்பிடமாகிய சரவெட்டியில் நடைபெற உள்ளது.

இவ்வைபவத்தைச் சரவெட்டிப் பங்கு மக்கள் ஒழுங்கு செய்துள்ளனர். நாளை சரவெட்டி புனித அந்தோனியார் தேவாலயத்தில் நன்றித்திருப்பலியும், விழா நாயகருக்கு வாழ்த்து உபசரணையும் நடைபெறும்.

## ஆசிரியர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கான "கலையணி ஆசிரியர் பயிற்சிக்கருத்தரங்கு" ஒன்று நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்புத் தலைமைச் செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது.

இக்கருத்தரங்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் மாணவர்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை இவான்**
**(லோகேஸ்வரன் மனோகரன்)**

மகனாய் 02-06-1970 — மாவீரனாய் 28-12-1989

இவ(ா)ன்,
தாவி வரும் தென்றல் போல
தமிழீழ தாகத்தை
காவித் திரிந்தவன்
ஆவி கொடுத்தேனும் விடுதலையை
அடைவோம் எனக்
கூவித் திரிந்தவன்!
தேசம் அழிந்தாலும் - தன்
தேசம் காப்பதற்குத்
திடமாய் எழுந்தவன் - தன்
மக்கள் உரிமைதனை
உணர்வுடன் மீட்டிடவே
தன்னுயிர் ஈந்தவன் - தமிழர்
இதயங்கள் தோறும் இந்த
வேங்கை என்றும் வாழும்

பிரதான வீதி,
சங்கானை.

உன் நினைவுகளோடு வாழும்
அம்மா, அப்பா, அக்கா, நண்பர்கள், உறவினர்கள்.

(R/2030)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## கைப்பற்றப்பட்ட பகுதிகளை நிர்வகிப்பதே முதல்வேலை

[ஜெருசலேம்] - ஷாமீர்

கைப்பற்றப்பட்ட அரபுப் பிராந்தியங்களின் கட்டுப்பாட்டை நிர்வகிப்பதே இஸ்ரேலியர்களின் முதல் கடமை என இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக் ஷாமீர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அடுத்த வருட பொதுத் தேர்தலுக்காக தமது லிகுட் கட்சியை வழிநடத்த வேண்டுமென்றும் இஸ்ரேலிய பூமி மண்ணை பாதுகாப்பதற்கு அரசியல் போராட்டம் நடத்துவதே லிகுட் கட்சியிடம் முன் வைக்கப்பட்டுள்ள கடமைப்பாடாகும் என்றும் அவர் சொன்னார். மேற்கு ஆற்றங்கரை காஸா பள்ளத்தாக்கு கோலான் குன்று ஆகிய பகுதிகளையே ஷாமீர் குறிப்பிட்டார். இப் பகுதிகளை இஸ்ரேல் 1967 ஆம் ஆண்டில் ஜோர்டான், எகிப்து, சிரியா ஆகிய நாடுகளிடமிருந்து கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## கூ. சங்கங்களுக்கு கப்பல் மூலம் உணவு

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களை கப்பல் மூலம் யாழ். மாவட்டத்திற்கு எடுத்து வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென தனியாக ஒரு கப்பல் வாடகைக்கு அமர்த்தப்படவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிக விரைவில் கப்பல்மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)


ஸ்ரீதர் திரையரங்கில்
**அல்ஜீரிய நாட்டு**
**விடுதலைப் போராட்டம்**
[தமிழாக்கம் செய்யப்பட்டது]
தினசரி 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்
காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன
(B/3669)


## நினைவு கூருகின்றோம்...

**1991 - 12 - 28**



**மைக்கல்**

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

மைக்கல் (சண்முகம் சுப்பிரமணியம் - 6 ஆம் கட்டை, சாம்பல்தீவு, திருக்கோணமலை)

ஆசிரியர்களுக்கான "ஊள அணி ஆசிரியர் பயிற்சிக்கருத் தரங்கு" ஒன்று நேற்று வன் னிப் பகுதியைச் சேர்ந்த மாணவர் ஒன்றிய தலைமைச் செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது.

இக்கருத்தரங்கு எதிர்வரும் 30 ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் அறிவித்திருக்கின்றது.

## பெத்தலேமில் கிறிஸ்மஸ் இல்லை

(டெல்அவிவ்)

நத்தார்ப் பண்டிகை சென்ற புதன் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. ஆனால் இயேசு பிறந்த பெத்தலேகம் நகரம் வெறிச்சோடிக் கிடந்தது.

இயேசு பிறந்த பெத்தலேகம் நகரத்தை மக்கள் தரிசிக்க விடாமல் இஸ்ரேலிய இராணுவம் மூடிவிட்டது என்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கல்வியாண்டு
1990 | 1991


## விவசாயபீடம்

விவசாயபீட 1ஆம் (புதிய) 2ஆம் வருட மாணவர்களுக்கான 1990 / 91ஆம் கல்வியாண்டு 1992 ஜனவரி மாதம் 1ஆம் திகதி கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆரம்பமாகும்

- பதிவாளர்

(B-3696)

# நினைவஞ்சலி



## அமரர் தம்பு நடேஸ் அவர்கள்

(கண்ணன் கூல்பார் உரிமையாளர் கொடிகாமம்)

மலர்வு:- 05.05.1950 உதிர்வு:- 28.12.1989

ஆண்டு இரண்டு ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
தீரவில்லை எம்சோகம் அப்பாவே! அப்பாவே!
ஆருயிரே அப்பாவே
சகிரக்கமற்ற காலன் உனை கவர்ந்தானே
உன்னழகு முகம் காண்பதெப்போ
ஆண்டு இரண்டு ஆவதற்கு 10 தினங்கள் இருக்கையிலே
உங்கள் அப்பாவை அழைத்துக் கொண்டீரே
அன்பு முகம் காண்பதெங்கே
அன்பு மொழி கேட்பதெங்கே

கச்சாய் வெளி,
மனை. இவர் பிரிவால் துயரும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்

(R/3692)



## மைக்கல்

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை நிலாவெளிப் பகுதியில் சிறிலங்காப்படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

மைக்கல் (சண்முகம் சுப்பிரமணியம் - 6 ஆம் கட்டை, சாம்பல்தீவு, திருக்கோணமலை)

கோணேஸ் (பொன்னுத்துரை கௌரிராமன் - பன்குளம், திருக்கோணமலை)

லோகன் (பொன்னுத்துரை உதயகுமார் - பன்குளம், திருக்கோணமலை)

1987 ஆம் ஆண்டு முல்லைத்தீவு நகர் நோக்கி பயணம் செய்தபோது இந்திய படையினரால் கைதுசெய்யப்பட்டபின் காணாமற்போன வற்றாப்பளையைச் சேர்ந்த கணவன், மனைவி 2 குழந்தைகள்

1989 ஆம் ஆண்டு நெளுக்குளத்தில் தேசவிரோதிகளின் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

கப்டன் சுதர்சன் (வே. ஆறுமுகநாதன் - திருக்கோணமலை)

சாள்ஸ் (ஜெகதீஸ்வரன் - கணுக்கேணி, முள்ளியவளை, முல்லைத்தீவு)

2 ஆம் லெப். சிவன் (பரஞ்சோதிராஜா உமாகாந்தன் - குலசேகரம் வீதி, தணுக்காய்)

முசல்குத்தியில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

தனம் (வடிவேலு சிவானந்தன் - 97/2, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்)

இவான் (லோகேஸ்வரன் மகேஸ்வரன் பிரதான வீதி, சங்கானை)

றிச்சாட் (கோவிந்தசாமி அசோக்குமார் - வாரிக்குட்டியூர், வவுனியா)

சசிலன் (பரந்தாமன் மகேந்திரேஸ்வரன் - இரணை இலுப்பைக்குளம் வவுனியா)

வேந்தன் (வை. செல்வநாயகம் - சின்னத்தம்பனை, நேரியகுளம்)

கப்டன் பெரியண்ணை \ றீகன் (தம்பித்துரை பரமலிங்கம் - தண்ணீருற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு)

லெப். அமுதாப் (பிரான்சிஸ் இரேஸ் பத்மநாதன் - கொக்குத்தொடுவாய் முல்லைத்தீவு)

அருள் (நா. நாகராசா)

கங்கை (நடராசா ராஜேஸ்வரன்)

1990 ஆம் ஆண்டு விமலராமம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

பாலா (இராசையா தவனேசன் - நாவற்காடு, அச்சுவேலி தெற்கு)

மன்னார், நானாட்டான் பகுதியில் கிராமங்களை முற்றுகையிருந்து முன்னேற முயன்ற சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

கெனட் (பாக்கியராசா அன்ரனி பெனாட் (அலன்) - பனங்கட்டிக்கொட்டு, மன்னார்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி** (B/3693)



# பொலிஸ் துப்பாக்கிச் சூடு: தமிழகத்தில் மூவர் பலி

(சென்னை)

தமிழருக்கு எதிரான கர்நாடக வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராகப் பெரியார் மாவட்டம் கோபிச் செட்டிப் பாளையத்தில் இடம் பெற்ற கலவரத்தை அடக்குவதற்கும் பொலிஸார் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் உயிரிழந்தனர். பதினைந்து பேர் காயமடைந்தனர்.

கர்நாடகத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஆத்திரமடைந்த மக்கள் கோபிச் செட்டிப் பாளையப் பொலிஸ் நிலையத்தின் முன்னால் வாகனங்களுக்குத் தீ வைத்தனர் பொலிஸ் நிலையத்தின் மீது கல்லெறிந்ததில் இரு பொலிஸார் காயமடைந்தனர்.

இறந்த மூவருக்கும், காயமடைந்தவர்களுக்கும் முதலமைச்சர் ஜெயலலிதா நஷ்டஈட்டுப் பணம் வழங்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

# தமிழருக்கு எதிராக மைசூரில் வன்முறை

மைசூரில் தமிழர்களின் வீடுகள், கடைகளுக்கு குண்டர்கள் தீ வைத்துக் கொளுத்தினர் என்றும், கடந்த செவ்வாய், புதன் ஆகிய இரு தினங்களிலும் தமிழர் விரோத வன்செயல்கள் கட்டுக்கடங்காமல் போனது என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு வன்முறைகள் கட்டுக்கடங்காமல் போனதால் நிலைமையைச் சமாளிக்க இந்திய ராணுவம் அப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்முறைகளின் போது தீக்கிரையாக்கப்பட்ட வீடொன்றில் இருந்து ஒரு தமிழ்ப் பெண்ணின் கருகிய சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# முல்லையில் மருந்திற்கு பலத்த தட்டுப்பாடு

முல்லைத்தீவு மாவட்டத்திலும் மருந்துப் பொருள்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

ஒவ்வாண்டுக்குமுரிய மருந்து ஒதுக்கீடு இம்மாவட்டத்திற்குப் போதுமானதாக இல்லை என்றும், மருத்துவ ஊழியர்களும், டாக்டர்களும் இம்மாவட்டத்தில் போதியளவில் இல்லை என்றும் முல்லை மாவட்ட அரச செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதனால் இங்கு மருத்துவசேவை சீர்குலைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

# அமைய ஊழியருக்கும் ஊக்குவிப்பு கொடுப்பனவு

(நல்லூர்)

கல்வித் திணைக்களங்களிலும், பாடசாலைகளிலும் கடமையாற்றும் அமைய ஊழியர்களுக்கும், நிவாரண ஊழியர்களுக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கும் படி பணிக்கப்பட்டுள்ளது.

1-1-88 முதல் 4-7-89 வரை அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவை மேற்படி ஊழியர்களுக்கு அவர்கள் வேலை செய்த நாள்களை அடிப்படையாக வைத்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் எஸ். தில்லைநடராசா சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளார்.

## விமானம்

பப்பட்டது; எனினும் விமானத்திலிருந்த நூற்றி இருபத்தொன்பது பயணிகளில் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை.

இரண்டு எஞ்சின் கொண்ட இவ்விமானம் விழுந்து நொருங்கும்போது விமான எரிபொருள் தாங்கிகள் நிறைய எரிபொருள் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் விமானம் தீப்பற்றிக் கொள்ளாமையும். பயணிகள் சகலரும் உயிர் தப்பியமையும் அதிசயம் ஆனால் உண்மை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## புலிகள்

கூட்டுப்படை தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொக்கட்டிச் சோலை பகுதியிலிருக்கும் அரசடித்தீவுக் கிராமத்தில் எட்டுத் தமிழர்களை இராணுவம் கைது செய்தது என்றும் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களென்றும் லங்காபுவத் செய்தி தெரிவித்தது.

மேலும் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள கடற்கரைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் விசைப்படகொன்றைத் தாக்கி அழித்ததாகவும் லங்காபுவத் செய்தி வெளியிட்டது.

## வீரவணக்கம்

லேவ் இராஜேந்திரம், 115 ஆம் கட்டை, கிளிநொச்சி) நேற்று மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# இன்று ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் சமூக,பொருளாதார, விஞ்ஞான ஆய்வு சஞ்சிகையான" ஆதாரம். பற்றிய ஆய்வரங்கு இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் வே. நவரட்ணராசா, கலாநிதி பா.சிவகடாட்சரம், விரிவுரையாளர் திரு.மாஸின்னத்தம்பி ஆகியோர் ஆய்வரங்கில் பங்குகொள்கின்றனர். இதில் அனைத்து உற்பத்தித் துறைத்தலைவர்களையும் உறுப்பினர்களையும் ஏனையோரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (க)

# சனசமூக நிலையங்களுக்கு குளோரின்

(ஈச்சமோட்டை)

சூழல் பாதுகாப்பு சுகாதார வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா சனசமூக நிலையங்களுக்கும் யாழ். மாநகர சுகாதார பகுதியினர் குளோரின் பவுடரை வழங்கியுள்ளனர்.

இதனால் ஒவ்வொரு சனசமூக நிலைய சுற்றாடலில் வாழும்பொதுமக்களின் கிணறுகளுக்கு குளோரின் பவுடர் போடப்பட்டு வருகிறது. (43)

# கலை விழா

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த வசதி குறைந்த மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிதிக்காக இன்று காலை கலைவிழா ஒன்று நடைபெறவுள்ளது

## சுத்திகரிப்பு

நேற்று நகரின் பல பகுதிகளிலும் இடம் பெற்றன.

வடிகால்கள் துப்புரவு செய்தல். சுகாதாரப் பரிசோதகருடனிணைந்து சுகாதாரப்போதனைகள் நடாத்தல். குடிநீர்க் கிணறுகளுக்கு குளோரின் இடுதல். வீதிகளிலிருந்த குப்பை கூழங்களை அகற்றுதல், சுற்றாடல் துப்புரவு செய்தல், பொது இடங்கள் சுத்திகரிப்பு, பேக்கரிகள், தேனீர்ச்சாலைகள், உணவுச்சாலைகள் பரிசோதனையிடுதல் போன்ற பல வேலைகள் சுற்றுப்புற சூழல் சுகாதார வாரத்தை முன்னிட்டு நடைபெற்றன. இந்த வேலைகளில் ஆண்களும், பெண்களுமாக அநேக தொண்டர்கள் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் அவ்வப்பகுதிகளிலுள்ள சனசமூகநிலையத் தொண்டர்கள், மற்றும் சுகாதாரபரிசோதகர்கள் போன்றோரும் இணைந்து செயற்பட்டதைக் காணமுடிந்தது.

## பூநகரியில்

குண்டுகளை வீசின. இதனால் ஒருவீடு சேதமுற்றது பின்னர் மீண்டும் ஒரு மணி நேரம் விமானங்கள் குண்டு வீச்சு நடாத்தியதில் ஆலயமொன்றும் வீடு ஒன்றும் சேதமடைந்தன

# மலத்தியோன் விற்பனை; முற்றாகத் தடை

(யாழ்ப்பாணம்)

மலத்தியோன் கடைகளில் விற்கப்படுவதை முழுமையாகத் தடைசெய்யுமாறு யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் உணவு மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி த. மகாதேவாவைப் பணித்துள்ளார்.

மலத்தியோன் என்பது சிறு பிராணிக் கொல்லி மருந்து கடைகளில் விற்பதற்குத் தடைசெய்யப்பட்ட பொருளாகும். இது மலேரியாத் தடுப்புப் பாவிப்புக்கு மாத்திரம் மலேரியாத் தடுப்புச் சங்கத்தினால் பாவிக்க அனுமதிக்கப்பட்டது.

மேலும் இந்த மருந்தை ஒரு ஒழுங்கு முறை இல்லாமல் பாவிக்க விட்டால், மலேரியா ஜூரத்தைப் பரப்பும் அனோப்பிளிஸ் என்ற நுளம்பினத்தைச் சேர்ந்த பெண் நுளம்பினைக் கட்டுப்படுத்த முடியாது போய்விடும் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு அனோப்பிளிஸ் நுளம்பினம் அதற்குப் பழக்கமாகி அதை அழிப்பதற்கு முடியாது போய்விடுவதோடு பாரிய சுகாதாரப் பிரச்சினையும் ஏற்படும் என்று சுகாதார சேவைகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சில முக்கிய பாடங்கள் தீவகத். நடைபெறவில்லை

(கொழும்பு)

தீவகப் பகுதிக்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு வினாத்தாள்கள் வந்து சேராமையினால் அப்பகுதி, மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை.

இப்பகுதி சிறிலங்கா ராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த போதும் இப்பகுதிக்கான இரு வினாத்தாள்களும் போய்ச் சேரவில்லை. இதனால் இப்பகுதி மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றும்,

இப்பரீட்சைகளை மீண்டும் நடத்துமாறு தீவுப் பகுதி மாணவர்கள் பரீட்சை ஆணையாளரை கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


சுற்றுப்புறச் சூழல்

கலந்துரையாடல்

இன்று (28-12-91) பி. ப. 04-00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில், சுற்றுப் புறச் சூழல்சம்பந்தமான கலந்துரையாடலை யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பருதி அவர்கள் நடத்த உள்ளதால் யாழ் வட்ட அவை, நல்லூர் வட்ட அவைக்குட்பட்ட சகல கிராம அவை, சனசமூக நிலைய தலைவர், செயலாளர், உறுப்பினர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

B/3701

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி



9ஆம் நாள் நினைவஞ்சலி

கப்டன் கிர்மானி

(துரைராஜா சிவராஜ்குமார்)

வீரஜனனம்: 24-08-73
வீரச்சாவு. 20-12-91

குடும்பத்தின் இளையவனாய்
திருமலையில் பிறந்தாலும் நீ வளர்ந்து,
செங்குந்தா இந்துக் கல்லூரியில்
கல்வியைத் தொடர யாழ். வந்து
மண்மீட்புப்போரில் உன்னைஇணைத்து
சாவு தனை துச்சமென மதித்து
திருமலையில் களம் பல கண்டு
சாதனைகள் பல புரிந்து
சிறுவயதினிலேவிடுதலைஉணர்வுபெற்ற
கப்டன் கிர்மானியே!!!
விட்ட பணி தொடர மீண்டும்
வர அழைக்கின்றோம்.

இந்நாளில் மண்மீட்புப் போரில் உயிர் நீத்த அனைவரையும் நினைவு கூருகின்றோம்.

து. துரைராஜா (விடோ
தியேட்டர் முகாமையாளர்)
குடும்பத்தினர், உறவினர்,
நண்பர்கள்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

R/2048


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.